DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 67 /2022**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜசேகரன் | Father Name –பரமசிவம் | |
| Age | 58 | Village – | திருமலாபுரம் |
| | | Taluk – | தேனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2025.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 1 கிரைய ஆவணம் யார் மூலம் கிடைக்கப்பெற்றது என்றால் நான் தான் நகல் போட்டு எடுத்தேன். ராஜசேகரன் என்பதற்கு பதிலாக சந்திரசேகரன் என தவறுதலாக உள்ளது. வாசாஆ 1 கிரைய ஆவணம் 29.07.2019 அன்று பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் 3 லக்க சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் 1வது லக்க சொத்து சர்வே எண்.265, 268ல் 2462 சதுரடி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிழமேல் தென்பக்கம் அடி 73, வடபக்கம் அடி 51 என்றும், கீழ்பக்கம் அடி 36, மேல்பக்கம் 37 ½ அடி என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 1வது லக்க சொத்து முழுவதையும் 11.09.2020 அன்று பாகவிஸ்தி பத்திரம் பதிந்து கொண்டோம் என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆவணத்திற்கும், நாங்கள் பதிந்துள்ள பாகவிஸ்தி பத்திரமான வாசாஆ 5ற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 1ல் உள்ள 2 மற்றும் 3லக்கச் சொத்துக்கள் தற்சமயம் யார் வசம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 1 செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 1 செல்லத்தக்க ஆவணம் இல்லை என்பதால் தான் வாசாஆ 1யை பொறுத்து நான் மேல்நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆவணத்தை எழுதிவைத்த சாமிக்காளை நாடார் தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். சாமிக்காளைநாடார் இறந்துவிட்டதால் வாசாஆ 1

குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரங்கள் குறித்து, சாமிக்காளை நாடாரின் வாரிசுகளை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 4 ஆவணம் நில அளவையர் கொடுத்ததா அல்லது நகராட்சி ஆணையர் கொடுத்ததா என்றால் நிலஅளவையர் கொடுத்தது. வாசாஆ 4 வரைபடத்தை யார் மனு கொடுத்தாலும், நில அளவையர் கொடுத்துவிடுவார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 4 ஆவணத்தை நான் மனு கொடுத்து நிலஅளவையர் அளந்து பார்த்து எனக்கு வழங்கினார். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 4 ஆவணத்தில் வட்டாட்சியர் கையெழுத்து செய்துள்ளாரா என்றால் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 4 ஆவணம், வாசாஆ 5 ல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா இல்லை என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் எனக்கு வேண்டியவர்களை வைத்து வாசாஆ 5 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 2 ஆவணத்தில் சர்வே எண்.268/2 ன் கதவு எண் என்ன உள்ளது என்றால் 91 என குறிப்பிடப்பட்டுள்ளது. கதவு எண் 91 எனக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க வேறு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாசாஆ 2 ல் 72 சதுரமீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏதும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாசாஆ 2 ல் என்னுடைய வீடு ஓட்டு வீடு என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீடு தகர வீடு. வாசாஆ 5 ல் , பக்கம் 4 ல் சமுதாய பெரியவர்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் என குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் பெயர் என்ன என்றால் புஷ்பகாந்தி, சந்திரா, இந்திராணி, கிருஷ்ணவேனி ஆகும். சாமிக்காளைநாடார் வாரிசுகளையோ, கருப்பையாநாடார் வாரிசுகளையோ நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வாசாஆ 5 ல் சாட்சிக்கையொப்பம் செய்துள்ள தங்கமுத்தும், சுருளிவேலும் என்னுடைய உறவினர்கள் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகளை நான் விசாரணை செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் அவர்களை விசாரிக்க அவசியமில்லை. என்னிடம்

காட்டப்படுவது 11.08.2021 அன்று இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளின் வழக்கறிஞருக்கு நான் அனுப்பிய பதிலறிவிப்பு என்றால் சரிதான். 26.07.2021ல் 2ம் பிரதிவாதி மற்றும் J.ரேணுகாவும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு தான் நான் பதிலறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில், ரேணுகாவிற்கு சர்வே எண்.265, 268ல் 457 சதுரடியும், 2ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.265, 268ல் 1009 சதுரடி நிலமும் பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

4. என்னிடம் காட்டப்படும் நீமசாஆ 1 புகைப்படத்தில் உள்ள வீடு ரேணுகாவின் பூட்டப்பட்ட வீடு என்றால் சரியல்ல. அந்த புகைப்படத்தில் ரேணுகா இல்லம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது ரேணுகா வீடு இல்லை. இவ்வழக்கில் ரேணுகா அவசியதரப்பினர் என்றும், அவரை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 12.09.1988ல் நான் கிரையம் வாங்கிய 662 சதுரடி நிலம் போக மீதமுள்ள சொத்தின் உரிமையாளர்களான S.K.சௌந்தரராஜன்நாடாரின் வாரிசுகளை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கு மேற்கு பக்கம் இருக்கும் கருணாகரன் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான். கருணாகரனின் வாரிசுகள் மேற்கு பக்கம் சர்வே எண்.265, 268ல் உள்ள வீட்டில் குடியிருக்கிறார்கள் என்றால் சர்வே எண்.268/3ல் குடியிருக்கிறார்கள். கருணாகரனின் வாரிசுகளை நான் வேண்டுமேன்றே கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

5. வழக்கு சொத்து சம்பந்தமாக பெரியகுளம் மாவட்ட பதிவாளருக்கு 10.08.2021 அன்று மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவானது சொத்தில் இருக்கும் உரிமை சம்பந்தமான பிரச்சனை என்பதால் உரிமையியல் நீதிமன்றத்தை அனுகி தீர்ப்பு காணுமாறு முடித்துவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் உத்தரவு பிறப்பித்த பிறகு வழக்குரைச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு ஏதும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்தது பற்றி என்னுடைய பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிகள் தரப்பு கொடுத்த அறிவிப்பு மற்றும் நான் கொடுத்த பதிலறிவிப்பு பற்றியும் என்னுடைய பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

6. என்னிடம் காட்டப்படும் நீமசாஆ 3 வரைபடம் சரியானதா, தவறானதா என்றால் அதுபற்றி சரியாக தெரியாது. அதை பார்த்தால் எனக்கு குழப்பமாக உள்ளது. என்னிடம் காட்டப்படும் நீமசாஆ 4 வரைபடம் சரியானதா, தவறானதா என்றால் அதுபற்றி சரியாக தெரியாது. அதை பார்த்தால் எனக்கு குழப்பமாக உள்ளது. நீமசாஆ 3, 4 ஆவணங்களை குறித்து சர்வேயரை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். 04.03.1936 ல் சாமிக்காளை நாடார், கருப்பையா நாடார் மற்றும் என்னுடைய தந்தை பரமசிவம்நாடார் ஆகியோர் சேர்ந்து கார்மேகநாடாருக்கு எங்களுக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியும். கார்மேகநாடாரிடமிருந்து, S.S.குழந்தைவேல் நாடார் 06.03.1936 ல் கிரையம் வாங்கிவிட்டார். S.S குழந்தைவேல்நாடார் கிரையம் வாங்கிய 2 நாட்களில் சாமிக்காளை நாடார், கருப்பையா நாடார் மற்றும் என்னுடைய தந்தை பரமசிவம்நாடார் ஆகியோர்களுக்கு எந்தவித பிரதிபலனும் இன்றி சொந்த மைத்துனர்கள் என்பதால் கிரையம் கொடுத்துவிட்டார். மேற்படி சொத்து பத்திரத்தின் அடிப்படையில் 1440 சதுர அடி என்றால் அதுபற்றி தெரியாது. அந்த 1440 சதுரடியில் தான் எனக்கு கிரையம் கொடுத்த சௌந்தர்ராஜன் நாடார் 662 சதுரடி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் 662 சதுரடி கிரையம் வாங்கிய பத்திரத்தில், 2ம் பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1440 சதுரடி நிலம் சர்வே எண் 265 மற்றும் சர்வே எண்.268 ல் கட்டுப்பட்டது என்றால் மேற்படி 3 பத்திரங்களில் கட்டுப்பட்ட சொத்துக்கள் சர்வே எண் 265 மற்றும் சர்வே எண்.268 ல் உள்ளது. S.S

குழந்தைவேல் நாடார் சாமிக்காளை நாடார், கருப்பையா நாடார் மற்றும் என்னுடைய தந்தை பரமசிவம்நாடார் ஆகியோர்களுக்கு எந்தவித பிரதிபலனும் இன்றி சொந்த மைத்துனர்கள் என்பதால் கிரையம் கொடுத்துவிட்டார் என்பதை நிரூபணம் செய்ய எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை. 04.03.1936 ல் சாமிக்காளை நாடார், கருப்பையா நாடார் மற்றும் என்னுடைய தந்தை பரமசிவம்நாடார் ஆகியோர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றும் அதனால் 1951 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட வாசாஆ 1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த உண்மை சாமிக்காளைநாடாரின் வாரிசுகள் அனைவருக்கும் தெரியும் என்பதால் தான் அவர்களை வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

7. நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு உரிய நிலங்களை எனக்கு மீட்டு தருமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பிவாசாஆ 3 ன் படி பாத்தியப்பட்ட சொத்திற்கு வடக்கு எல்லையாக உள்ள பொது மண்சுவர் சம்பந்தமாக 2 ம் பிரதிவாதி என் மீது , அ.வ.எண்.103/2022 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு விவரங்கள் எனக்கு நன்கு தெரியுமா என்றால் ஓரளவு தான் தெரியும். அந்த வழக்கு விவரங்கள் தெரிந்த பின்பும், சௌந்தர்ராஜன் வாரிசுகள், கருணாகரன் வாரிசுகள் மற்றும் ரேணுகாவை இந்த வழக்கில் கட்சி சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அவர்களை கட்சி சேர்க்க வேண்டிய அவசியமில்லை. 12.09.1988 கிரையப்பத்திரன் அடிப்படையில் தான் வாசாஆ 6, குடிநீர் குழாய் மற்றும் வாசாஆ 7 மின்கட்டண ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு முன்பாகவே குடிநீர் இணைப்பும், மின் இணைப்பும் வாங்கப்பட்டது. 1936, 1971, 1988 ஆகிய வருடங்களில் உள்ள பத்திரங்களில் சர்வே எண்.265, 268 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் உட்பிரிவு எண் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 1988 ல் நான் கிரையம் வாங்கிய பின்பு என் சொத்தை உட்பிரிவு செய்ய எங்கு மனு கொடுத்தேன் என்றால்

நகராட்சி அலுவலகத்தில் மனு கொடுத்தேன். நான் நகராட்சி அலுவலகத்தில் உட்பிரிவு செய்யக் கோரி மனு கொடுத்தேனா என்றால் மனு கொடுத்ததின் அடிப்படையில் தான் அளந்து உட்பிரிவு செய்தார்கள்.

8. நான் நகராட்சி அலுவலகத்தை தவிர வேறு எங்கும் மனு கொடுத்தேனா என்றால் நகராட்சி சர்வேயரிடம் மட்டும் தான் கொடுத்தேன். நான் உட்பிரிவு செய்ய என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனக்கு நகராட்சி அலுவலத்தில் எனது உறவினர் வேலை செய்து வந்ததால் எந்தவித ஆவணமும் கொடுக்காமல் தவறாக உட்பிரிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிலத்தை உட்பிரிவு செய்ய வட்டாட்சியருக்கு தான் அதிகாரம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நகராட்சி அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள தவறுதலை பயன்படுத்தி மோசடியான பத்திரங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மோசடியாக தயார் செய்யப்பட்டதற்காக 2ம் பிரதிவாதி, என் மீதும் எனக்கு உதவி புரிந்த மற்ற நபர்கள் மீதும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் அதில் இருந்து தப்பிப்பதற்காக தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மோசடியாக தயார் செய்யப்பட்ட பத்திரத்தின் அடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. ஊனமுற்ற பிரதிவாதியை அளக்கழிக்க வேண்டும் என்று அ.வ.எண்.69/2020 தாக்கல் செய்து அதை திரும்ப பெற்றுவிட்டு தற்போது பொய்யான இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், அந்த நிலத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2025.09.09 16:31:20 +0530

District Munsif,
Bodinayakanur.